**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 430/2025</u>**
**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலாயுதம் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 19th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். 20.06.2022 ம் தேதி, இரவு 09.00 மணிக்கு நான் நல்லூர் ஆலடிப்பட்டியிலுள்ள வைத்தியலிங்கசுவாமி கோவிலுக்கு தென்புறம் வைஷ்ணவி என்ற கூல்டிரிங்ஸ் கடையை பூட்டி விட்டு வீட்டிற்கு வந்து, எப்போதும் போல் சாப்பிட்டு விட்டு தூங்கி விட்டேன். எனக்கு 2 பெண் குழந்தைகளும், அன்பரசி என்ற மனைவியும் இருக்கிறார்கள். 21.06.2022 ம் தேதி, அதிகாலை சுமார் 01.20 மணியளவில் எனது வீட்டிற்கு முன்புறமுள்ள கதவை உள்பக்கமாக பூட்டி விட்டு தூங்கிக்கொண்டிருக்கும்போது, கடுமையான புகை வீட்டினுள் வந்தது.

பிள்ளைகளும், எனது மனைவியும் சத்தம் போடவும் நான் கதவை திறந்து பார்க்க முயற்சித்தபோது, கதவை திறக்க முடியவில்லை. அதன் பின்னர், எனது அண்ணன் கஜேந்திரன் என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து விபரத்தை கூறி வரச்சொன்னேன். அவர் வந்ததும்

எனது வீட்டின் கதவு வெளிப்பக்கமாக தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததை திறந்து பார்த்தபோது, எனது வீட்டின் தேக்கு மரக்கதவு முழுவதும் எரிந்து விட்டது. அதன் மதிப்பு சுமார் ஒரு லட்சம் இருக்கும். அதன் பின்னர் வெளியே வந்து அக்கம் பக்கம் விசாரித்தோம்.

எனது வீட்டிற்கு வடக்குபக்கமுள்ள வள்ளிநாயகம் என்பவரது மகன் கலைவாணன் என்பவரது வீட்டின் சீ.சீ.டீ.வி கேமராவை பார்த்தோம். அந்த பதிவில் எதிரி மேகநாதன் இடுப்பில் அரிவாளுடனும், கையில் ஒரு லிட்டர் பெட்ரோல் கேனையும் வைத்துக்கொண்டு அந்த இடத்தில் வருவதும், பின்னர் செல்வதும் தெரிந்தது. நான் அந்த வீட்டில் உள்ள பதிவை பென் டிரைவ்வில் காப்பி செய்து, சீ.டி மற்றும் புகாருடன் ஆலங்குளம் காவல்நிலையத்தில் கொண்டு போய் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும்.

(சீ.டீ வழக்குகோப்பில் இல்லை என்பதினால், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சீ.டீ தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்ய வேண்டுமெனவும், எனவே முதல் விசாரணை ஒத்தி வைக்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். எனவே, முதல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:00:35 +0530